தினபூமி, மதுரை 19.8.2007

19.8.2007

# பி1 புதிய மென்பொருள் பயிற்சி: மதுரையில் நாளை துவக்கம்

## சாப்-ஆல்டியா நிறுவனங்கள் ஏற்பாடு

மதுரை, ஆக.19-

சாப், ஆல்டியா நிறுவனங்களின் ஏற்பாட்டில் சாப்-பி1 என்ற புதிய மென்பொருள் பயிற்சி மையம் நாளை மதுரையில் துவங்குகிறது.

இதுகுறித்து ஆல்டியா நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அதிகாரி சௌந்தரராஜன் நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியாவிலேயே முதல்முறையாக சாப்-பி1 மென்பொருள் பயிற்சியை சாப் இந்தியா நிறுவனமும், ஆல்டியா இன்போடெக் நிறுவனமும் இணைந்து மதுரையில் அறிமுகம் செய்கின்றன. ஈ.ஆர்.பி. எனப்படும் என்டர்பிரைசஸ் ரிசோர்ஸ் பிளானிங் வகை மென்பொருள் சேவையில் உலகின் தலைசிறந்த நிறுவனமாக விளங்கும் ஜெர்மனியைச் சேர்ந்த சாப் நிறுவனம், இந்த ஈ.ஆர்.பி. வகை மென்பொருள் சந்தையில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்காக பி1 எனும் புதிய மென்பொருளை வடிவமைத்துள்ளது. மூன்று வருடங்களுக்கு முன்பு உலகின் மற்ற பகுதிகளில் அறிமுகம் செய்யப்பட்ட இம்மென்பொருள் ஜனவரி 2006ல் இந்தியாவிலும் அறிமுகம் செய்யப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்ட பி1 மென்பொருள் அந்நிறுவனங்களில் நிதி, விற்பனை, கொள்முதல், உற்பத்தி, வாடிக்கையாளர் உறவு, மேலாண்மை ஆகிய அனைத்து செயல்களையும் ஒருங்கிணைத்து உற்பத்தியை அதிகரிக்கவும், செலவுகளை குறைக்கவும் துல்லியமான நிதியறிக்கைகளை தயாரிக்கவும் உதவும்.

வரும் ஆண்டுகளில் சாப் பி1 திறனாளர்களின் அபரிதமான தேவையை கணித்து வைத்திருக்கும் சாப் நிறுவனம் தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களை கொண்டு சிறந்த முறையில் தரமான பயிற்சி முறையை உருவாக்கி முதல்முறையாக வெளி உலகிற்கு அறிமுகப்படுத்துகிறது. இதுநாள் வரை இப்பயிற்சி சாப் நிறுவனத்தின் கூட்டு நிறுவனங்களுகு மட்டுமே அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சாப் மதுரை பயிற்சி மையம் துவக்க விழா நாளை 20-ம் தேதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ராஜா முத்தையா மன்றத்தில் நடைபெறுகிறது. தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் தாளாளர் கருமுத்து.தி.கண்ணன் தலைமைதாங்க, தமிழ் இசை சங்கத்தின் காப்பாளர் சேக்கப்பன், சாப் இந்திய நிறுவனத்தின் பயிற்சி பிரிவின் மேலாளர் சஞ்சய் வஸ்வானி சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

உடன் ஆல்டியா நிறுவன அதிகாரிகள் சந்துரு முத்து, சுப்பிரமணியம் ஆகியோர் இருந்தனர்.